**DEPOSITION OF WITNESS**
**( Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE**
**CHEYYUR**

**Calender** :
**Miscellaneous** : **CC Case No.37/2023**
**Sessions** :
**Deposition of Witness for** : **PW 1 , LW1**

| | |
|---|---|
| Name | : திருமதி.கன்னியம்மாள் |
| Father's/Husband Name | : திரு. சீனிவாசன் |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |
| Age | : |

**Solemnly affirmed in accordance with the provision of oaths Act 1969 on the 18th day May, 2026**

( எதிரி தற்போது நீதிமன்றத்தில் ஆஜரில் உள்ளார்)

**முதல் விசாரணை:-**

1. நான் தற்போது கீழச்சேரி கிராமத்தில் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான்.

2. கடந்த 2020ம் ஆண்டு தேதி எனக்கு சரியாக ஞாபகம் இல்லை. மாலை சுமார் 6.00 மணியளவில் நான் வீட்டில் இருந்தபோது ஆஜர் எதிரி அவருக்கு வீட்டிற்கு முன்பில் உள்ள ரோட்டுக்கு அருகில் எனது கணவர் சீனிவாசன் என்பவரை பார்த்து வேட்டைக்காரர்களை விடமாட்டோம் என்று கூறி எதிரி கையில் வைத்திருந்த கத்தியால் எனது கணவரை தலையிலும், கன்னத்திலும் வெட்டி ரத்த காயத்தை ஏற்படுத்தினார்.

3. மேற்படி சண்டையை ஊரில் இருந்தவர்கள் விலக்கிவிட்டார்கள். பின்பு நான் வீட்டிலிருந்து தகவல் தெரிந்து எனது கணவரை சென்று பார்த்து பின்பு அங்கிருந்து 108 ஆம்புலன்சு மூலம் செய்யூர் அரசு மருத்துவமனைக்கு முதல் சிகிச்சைக்காக அழைத்து சென்றோம். பின்பு அங்கிருந்து மேல்சிகிச்சைக்காக செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். பின்பு நடந்த சம்பவத்திற்கு நடவடிக்கை எடுக்க கோரி நான் புகார் மனு கொடுத்தேன். புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது தான். **(அந்த புகார் மனு அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

சம்பவ நடந்த இடத்திற்கும், எனது வீட்டிற்கும் ஐந்து, ஆறு வீடு தள்ளி தூரம் இருக்கும். சம்பவம் நடந்த அன்று நான் வீட்டில் இருந்தேன் என்றால் சரிதான். எனது கணவருக்கு அடிப்பட்டது என்று கேள்விபட்டு வந்து பார்த்தேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்க தெரியாது. புகாரை யார் எழுதியது என்றால் வி.ஏ,ஓ எழுதி கொடுத்தார்.

அந்த புகாரில் என்ன எழுதியிருக்கிறது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். சம்பவ இடத்தில் எத்தனை நபர்கள் இருந்தார்கள் என்றால் 20 பேர் இருந்தார்கள். ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர் என்றால் சரிதான். ஆஜர் எதிரி எனது கணவரை அடிக்கவில்லை என்றாலும் எனது கணவருக்கு பவ்வியப்பட்டு பொய் புகார் கொடுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**போலிசார் என்னை இந்த வழக்கு சம்பந்தமாக விசாரித்தார்களா என்றால் விசாரித்தார். அடிப்பட்ட தினத்தன்று செய்யூர் ஆஸ்பட்டலில் வைத்து விசாரித்தார்கள்.**

**இத்துடன் குறுக்கு விசாரணை முடித்துக்கொள்ளப்பட்டது**

**மறு விசாரணை...** இல்லை

Signature of Witness

Taken down before me in open court, read over to the witness and admitted by the deponent to be correct.

**Sd/-Tmt.C.M.Amaravathi,**
District Munsif Cum Judicial Magistrate
Cheyyur.